தினமணி

**வாழைத்தார் ஏலம்: கதளி, நேந்திரன் விலை அதிகரிப்பு**

First Published : 15 Nov 2010 09:54:55 AM IST

மேட்டுப்பாளையம் நவ. 14: மேட்டுப்பாளையம் வாழைத்தார் ஏல மையத்தில் ஞாயிற்றுக்கிழமை நடந்த ஏலத்தில் வாழைத்தார்கள் அதிகளவில் விற்பனைக்கு வந்தன. மேலும், கதளி, நேந்திரன் ரக வாழை நல்ல விலைக்கு விற்பனையானது.

மேட்டுப்பாளையம் வாழைக்காய் ஏல மையத்தில் ஞாயிறு மற்றும் புதன்கிழமைகளில் ஏலம் நடைபெறும். உள்ளூர் மற்றும் கேரள வியாபாரிகள் வாழைகளை கொள்முதல் செய்கின்றனர்.

இச்சங்கத்தின் தனி அலுவலர் அ.பழனிசாமி கூறியது: பாலப்பட்டி, சித்தன்குட்டை, வெள்ளியங்காடு, நெல்லித்துறை, லிங்காபுரம், கல்லார், நடூர் உட்பட மேட்டுப்பாளையம் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து 7000 வாழைத்தார்கள் ஏலத்திற்கு வந்தன. இதில் கதளி கிலோ ரூ. 17முதல் 22 வரையும், நேந்திரம் கிலோ ரூ. 18 முதல் 23 வரையும், பூவன் ஒரு தார் ரூ. 60-130 வரையும், ரோபஸ்டா ரூ. 100 முதல் 120 வரையும், சாம்பல் ரூ. 80 முதல் 150 வரையும் விற்பனையானது. கடந்த வாரம் பெய்த கடும் மழையால் ஏல மையத்திற்கு 5000 தார்களே விற்பனைக்கு வந்தன. ஆனால் இந்த வாரம் தார்களின் வரத்தும் அதிகரித்து, விலையும் கிலோவிற்கு ரூ. 2 கூடுதலாக விற்பனையானது என்றார்.

**பயிர்க் கடன் குறித்த தொழில்நுட்பக் குழுக் கூட்டம்**

First Published : 15 Nov 2010 12:24:11 PM IST

புதுக்கோட்டை, நவ. 14: புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு 2011-2012 ஆம் ஆண்டுக்கான பயிர்க் கடன் அளவை நிர்ணயிப்பது தொடர்பான தொழில்நுட்பக் குழுக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்துக்கு வங்கியின் தனி அலுவலர்- இணைப் பதிவாளர் மு. பழனிவேலு தலைமை வகித்தார்.

விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் வி. மணிவேல், எம். முருகேசன், நபார்டு வங்கி துணைப் பொது மேலாளர் ஆர். ஆனந்த், முன்னோடி வங்கி மேலாளர் எஸ். சுதாகர், வேளாண் துணை

இயக்குநர், அறந்தாங்கி சரக துணைப் பதிவாளர், மத்திய கூட்டுறவு வங்கிப் பொது மேலாளர், தோட்டக்கலை துணை இயக்குநர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**பி.டி. பருத்தியில் நோய்த் தாக்குதலை கட்டுப்படுத்த யோசனை**

First Published : 15 Nov 2010 12:22:47 PM IST

பெரம்பலூர், நவ. 14: பெரம்பலூர் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் பி.டி. பருத்தியைத் தாக்கும் நோயை கட்டுப்படுத்த வாலிகண்டபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் பருத்தி வயல்களில் தண்ணீர் தேங்குவதால், ஆல்டர் நேரியா, இலைப் புள்ளி நோய், பாக்டீரியா, இலைக் கருகல் நோய், வேர் அழுகல் நோய், வாடல் நோய்கள் தாக்கி, பருத்தியில் அதிக சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இதுபோன்ற நோய்கள் பருத்தியை தாக்காமல் இருக்க, பருத்தி வயலைச் சுற்றி வடிகால் அமைத்து, தேங்கிய தண்ணீரை வெளியேற்ற வேண்டும். நோய்கள் தாக்கும் போது, மேலாண்மை முறைகளை நோய்க்கு தகுந்தவாறு பயன்படுத்தினால் பருத்தி செடிகளை உரிய நேரத்தில் பாதுகாக்கலாம்.

பருத்தி செடியில் வேர்கள் அழுகிக் காணப்படும் போது, எதிர் உயிர் கொல்லிகளான சூடோமோனாஸ் அல்லது டிரைக்கோடெர்மா ஆகியவைகளில் ஏதாவது ஒன்றை, ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் அல்லது பூஞ்சாணக் கொல்லிகளான கார்பண்டாசசிம் அல்லது மென்கோசெப் மருந்துகளில் ஏதாவது ஒன்றை ஒரு லிட்டர் தண்ணீரில் 5 கிராம் அளவில் கலந்து செடிக்கு, செடி ஊற்ற வேண்டும்.

இலைகளில் பாக்டீரியா இலைப் புள்ளிகள் காணப்படும் போது, காப்பர் ஆக்ஸி குளோரைடு ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 கிராமுடன் பாக்டீரியா கொல்லியான ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட்டை 10 லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் என்ற அளவில் 10- 15 நாள்கள் இடைவெளியில், இலைகளின் மீது தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.

இதுதொடர்பான மேலும் விவரங்களுக்கு, பருத்தி ஆராய்ச்சித் திட்டப் பொறுப்பாளர் சி. சங்கரை 9443807381 அல்லது திட்ட அலுவலர் ப. சரவணனை 9944244582 என்ற எண்களில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**கூட்டுறவுத் துறை அலுவலகங்களில் மரக்கன்றுகள் நடும் விழா**

First Published : 15 Nov 2010 12:20:44 PM IST

பெரம்பலூர், நவ. 14: பெரம்பலூர் மண்டல இணைப் பதிவாளர் அலுவலக வளாகத்தில் 57-வது வாரவிழாவையொட்டி, மரக்கன்றுகள் நடும் விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

57-வது அகில இந்திய கூட்டுறவு வார விழா நவ. 14 ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை கொண்டாடப்படுகிறது.

அதையொட்டி, பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் செயல்படும் கூட்டுறவுத் துறை சார்ந்த அனைத்து வகை அரசு அலுவலக மற்றும் கூட்டுறவு நிறுவனப் பணியாளர்கள், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கட்டுரை, பேச்சு மற்றும் கவிதைப் போட்டிகள் நடைபெறுகிறது.

அதன் தொடக்கமாக, பெரம்பலூர் மண்டல கூட்டுறவு இணைப் பதிவாளர் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விழாவில், பெரம்பலூர் மண்டல இணைப் பதிவாளர் ஆர். ராமமூர்த்தி கூட்டுறவு சங்கக் கொடியை ஏற்றி வைத்து, மரக்கன்றுகளை நட்டுவைத்தார்.

இந்நிகழ்ச்சியின் போது, பெரம்பலூர் சரக துணைப் பதிவாளர் கந்தசாமி, பொது விநியோகத் திட்ட துணைப் பதிவாளர் சி. ஜெயராமன், கூட்டுறவு சார் பதிவாளர்கள் அழகுராஜ், கிருஷ்ணமூர்த்தி, கலந்தர் நைனா முகம்மது உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தினமலர்

**விதை ஏற்றுமதியில் பின்தங்கியுள்ளோம்பயிர் தொழில்நுட்ப கழக இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 16,2010,00:23 IST

மதுரை:""விதை உற்பத்தியில் முன்னிலையில் இருந்தாலும், ஏற்றுமதியில் பின் தங்கி உள்ளோம்,'' என, இந்திய பயிர் பதன தொழில்நுட்ப கழக இயக்குனர் அழகுசுந்தரம் தெரிவித்தார்.மதுரை விவசாயக் கல்லூரியில் நடந்த தொழில்நுட்பப் பயிற்சி துவக்க விழாவில் அவர் பேசியதாவது :உலகளவில் 1985ல் விதைக்கான வர்த்தகம் 4500 கோடி ரூபாய்க்கு மேல் இருந்தது. 2010ல், இது எட்டு மடங்காக அதிகரித்துள்ளது. இந்தியாவில் விதைகள் உற்பத்தி 4000 கோடி ரூபாயாக இருந்தாலும், ஏற்றுமதியில் நாம் மிகவும் பின்தங்கியுள்ளோம். 2025ம் ஆண்டில் உலகத்தின் உணவுத் தொழிற்சாலையாக இந்தியா இருக்கும், என மெக்கன்ஸி என்பவரின் உலக ஆய்வில்

தெரிவிக்கப்பட்டுள்ளது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு ஏற்பட்டாலும், ரசாயன உரங்கள், பூச்சிகொல்லிகளை பயன்படுத்தி வருவதால், நிலமும், சுற்றுச்சூழலும் மொத்தமாக பாழாகி வருகிறது.

ஒட்டுமொத்தமாக இயற்கை விவசாயத்துக்கு மாறினாலும், உற்பத்தியில் பின்னடைவு ஏற்படும். எனவே கொஞ்சம் கொஞ்சமாக இயற்கை விவசாயத்துக்கு மாறவேண்டும். விவசாயிகள், தங்களது விளைச்சலில் இருந்தே விதைகளை தேர்வு செய்வதால், மகசூல் குறைகிறது. தரமான விதைகள், நீர் மேலாண்மை, பயிர் மேலாண்மையின் மூலம் உற்பத்தியை அதிகரிக்கலாம்.
விதைஉற்பத்தியாளர்களாக விவசாயிகள் மாற வேண்டும். விதையை ரசாயன முறையில் விதை நேர்த்தி செய்தால், பயிர் பருவத்தில் ரசாயன உரம் மற்றும் தண்ணீர் தேவையை பாதியாக குறைக்கலாம். நூறாண்டுகள் கழித்தும், நமது சந்ததியினர் விவசாயத்தின் மூலம் உணவு உற்பத்தி செய்ய முடியும், என்றார்.கல்லூரி டீன் வைரவன் கூறுகையில்,"" உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த ஒரே நாடு இந்தியா. விவசாயிகளில் 30 சதவீதம் பேர் தரமான விதைகளை தேர்வு செய்கின்றனர். ஆனால் தொழில்நுட்பங்களை பின்பற்றுவோர் 10 சதவீதத்துக்கும் குறைவே. விவசாயத்தில் மனிதவளம் குறைந்து வருவதால், இயந்திரமயத்திற்கு மாறவேண்டும். நெல், கரும்பு, மக்காச்சோளத்தைப் போல, மற்ற பயிர்களையும் இயந்திரமயமாக்க வேண்டும்," என்றார்.
மனையியல் கல்லூரி டீன் பானுமதி, விதை அறிவியல் துறைத் தலைவர் சிவசுப்ரமணியம், பேராசிரியர்கள் பாலகிருஷ்ணன், சங்கரலிங்கம், ராஜா, கீதா தொழில்நுட்பங்களை விளக்கினர்.

**பண்ணைப்பள்ளி திட்டம் துவக்கவிழா**

பதிவு செய்த நாள் : நவம்பர் 16,2010,00:21 IST

கொட்டாம்பட்டி:கொட்டாம்பட்டி ஒன்றியம் தும்பைபட்டி ஊராட்சிக்குட்பட்ட தாமரைப்பட்டியில் பண்ணைப்பள்ளித் திட்டத்தின் துவக்கவிழா நடந்தது. ஆத்மா திட்டத்தின் கீழ் நடந்த விழாவிற்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சங்கரலிங்கம் தலைமையேற்க, துணை இயக்குநர் சேவுகப்பெருமாள் முன்னிலை வகித்தார். ராஜராஜன் நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள், செயல்விளக்கங்கள் விவசாயி ரங்கசாமியின் வயலில் செய்து காண்பிக்கப்பட்டன. ஆத்மா விவசாய ஆர்வலர் குழுத் தலைவர் சண்முகம், வேளாண்மை உதவி இயக்குநர் செல்வபாண்டி மற்றும் பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர் ரவி, துணை அலுவலர் ஆதீஸ்வரன், உதவி அலுவலர்கள் ரவிச்சந்திரன், பிரபு செய்திருந்தனர்.

**நபார்டு வங்கி மூலம் ரூ.1,075கோடி கடன் வழங்க இலக்கு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 16,2010,00:34 IST

சிவகங்கை:நபார்டு வங்கி மூலம் 2011 -12 ல் 1,075 @காடி ரூபாய் கடன் வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளதாக, கலெக்டர் சம்பத் தெரிவித்தார்.சிவகங்கையில் மாவட்ட வங்கியாளர் ஆலோசனை கூட்டம் நடந்தது. அடுத்த ஆண்டிற்கான கடன் திட்ட அறிக்கையை கலெக்டர் வெளியிட, ரிசர்வ் வங்கி உதவி பொது மேலாளர் குணாளன் பெற்றார். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மண்டல மேலாளர் ராமதாஸ், ஊரக வளர்ச்சித்துறை திட்ட இயக்குனர் அமானுல்லா, முன்னோடி வங்கி மேலாளர் பெருமாள், மகளிர் திட்ட அலுவலர் சீனிவாசன் பங்கேற்றனர்.கலெக்டர் பேசுகையில், ""நபார்டு வங்கியின் கடன் திட்ட அறிக்கை படி 2011-2012ம் ஆண்டில் 1,075 கோடி ரூபாய் கடன் வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளனர். குறையற்ற நிலத்தடி நீர் ஆதாரம் உள்ளதால், நீர் ஆதார கடன்களுக்கும், பயறு வகை, சிறு தானிய உற்பத்தி அதிகரிப்புக்கு முன்னுரிமை தரப்படும். அனைவருக்கும் வங்கி சேவை திட்டத்தில் சுய உதவிக்குழுக்கள் மூலம், அதிக அளவில் நிதி வழங்கப்படும்," என்றார். நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் கோபால் நன்றி கூறினார்.

**"ஆமணக்கு புண்ணாக்கு விற்க உரிமம் அவசியம்'**

பதிவு செய்த நாள் : நவம்பர் 16,2010,01:40 IST

கோவை: "ஆமணக்கு மற்றும் வேப்பம் புண்ணாக்குகளை, மத்திய அரசு உரங்களாக அறிவித்துள்ளது. இவற்றை உரிய உரிமம் பெற்றே உர விற்பனையாளர்கள் விற்பனை செய்ய வேண்டும்; மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும்' என, வேளாண் துறை அறிவித்துள்ளது. கோவை வேளாண் இணை இயக்குனர் அலுவலக அறிக்கை: உரக்கட்டுப்பாட்டு சட்டம் 1985ன் விதிகளின்படி 2008 ஏப்ரல் முதல் வேப்பம் புண்ணாக்கு மற்றும் ஆமணக்கு புண்ணாக்கு ஆகியவற்றை தயாரிக்கவும், விற்பனை செய்யவும் தடையில்லா சான்று வழங்கப்பட்டிருந்தது. தற்போது மத்திய அரசு, வேப்பம் புண்ணாக்கு மற்றும் ஆமணக்கு புண்ணாக்கு ஆகியவற்றுக்கு உரசத்துக்களை நிர்ணயம் செய்துள்ளது; உரகட்டுப்பாட்டு சட்டம் 1985ன் விதிகளின்படி, இவற்றை உரங்களாக அறிவித்துள்ளது. எனவே, உரங்களை தயாரிக்க உரிய உரிமத்தை கோவை வேளாண் இணை இயக் குனரிடம் பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும், அனைத்து உர விற்பனையாளர்களும் ஆமணக்கு மற்றும் வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றை "ஓ' படிவம் இன்றி

விற்பனை செய்யக் கூடாது. விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட உர விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

**ஆத்தூரில் இயந்திரம் மூலம் நாற்று நடவு துவக்கம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 15,2010,23:46 IST

ஆத்தூர்:ஆத்தூர் தாலுகாவில் முதன் முறையாக இயந்திரம் மூலம் நெல் நடவு பணிகள் நடந்தன.விவசாய பணிகளுக்கு ஆட்கள் கிடைக்காத நிலையில், தற்போது நாற்று நடும் பணிகளையும் இயந்திரங்கள் மூலம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதற்காக பிரத்யேக முறையில் நாற்று உருவாக்கப்படுகிறது. ஆட்கள் நடவு செய்யும் நாற்றுக்கு ஏக்கர் ஒன்றிற்கு 20 கிலோ வரை விதை நெல் தேவைப்படும். 30 நாட்கள் கழிந்த பிறகே நாற்றங்காலில் இருந்து நாற்று எடுக்கப்பட்டு வயலில் நடப்படும். ஒரு ஏக்கரில் நடவு செய்ய 20 ஆட்கள் இருந்தால் தான் நடவு பணி ஒரே நாளில் முடியும். ஆட்கள் குறைந்தால் நடவு செய்வதற்கான நாட்கள் அதிகரிக்கும்.

தற்போது, இயந்திரம் மூலம் நடவு செய்யும் நாற்றுக்கு ஏக்கர் ஒன்றிற்கு 3 கிலோ விதைநெல் போதுமானது. 15 நாட்களில் இளம் நாற்று இயந்திரம் மூலம் வயலில் நடப்படுகிறது.இதன்மூலம் மகசூலும் கணிசமாக அதிகரிக்கிறது. ஒரு ஏக்கர் நடவு செய்வதற்கு ஒரு மணி நேரம் 15 நிமிடம் ஆகிறது. ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த இயந்திரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு ரூபாய் 2 ஆயிரத்து 500 வாடகையாக வசூலிக்கப்படுகிறது. தற்போது நாமக்கல்லில் இருந்து இயந்திரம் வரவழைக்கப்பட்டுள்ளது.சில ஆண்டுகளுக்கு முன் இதே ஆத்தூரில், நெல் அறுவடை செய்வதற்கு இயந்திரத்தை பயன்படுத்த முற்பட்ட போது, தங்கள் வேலை வாய்ப்பு பறிக்கப்படுவதாக கூறி,எதிர்ப்பு தெரிவித்து விவசாய கூலியாட்கள் போராட்டம் நடத்தினர். தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டம் இந்த நிலைமையை அடியோடு மாற்றியுள்ளது. தற்போது நில உரிமையாளர்கள் அழைத்தாலும் கூலியாட்கள் வேலைக்கு வர விரும்பாத நிலை ஏற்பட்டுள்ளது.

**கரும்பு விவசாயிகள் சங்க மாநில சிறப்பு மாநாடு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 15,2010,21:57 IST

உளுந்தூர்பேட்டை : தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாநில சிறப்பு மாநாடு உளுந்தூர் பேட்டையில் நடந்தது. மாநில தலைவர் பழனிசாமி தலைமை தாங்கினார். பொது செயலாளர் ஏழுமலை, பொருளாளர் சின்னப்பா முன்னிலை வகித்தனர். ஆலை சங்க செயலாளர் சீனுவாசன் வர வேற்றார். விவசாயிகள் சங்க மாநில தலைவர் பாலகிருஷ்ணன், பொது செயலாளர் சண்முகம், எம். எல்.ஏ., மாரிமுத்து பேசினர். மாநாட்டில் கூட்டுறவு ஆலைகளுக்கு தேர்தல் நடத்தவேண்டும். செங் கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 114 கோடி ரூபாய் கடனை ரத்து செய்ய வேண்டும். ஆலைகளை மேம்படுத்தவேண் டும், பங்கு மூலதனம் அளித்த விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை, சர்க்கரை விற்பனை லாபத் தில் பங்கு வழங்க வேண் டும் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. சுப்ரமணியன், ராதாகிருஷ்ணன், ஜெயராமன், ஆறுமுகம், தணிகாசலம், குருநாதன், ஜனார்த்தனன், சுந்தரமூர்த்தி, ராஜேந்திரன்,லோகநாதன், கந்தவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**சாணார்பட்டியில் ராஜராஜன் ரகம்நெல் சாகுபடி செய்ய இலக்கு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 14,2010,23:07 IST

சாணார்பட்டி:சாணார்பட்டியில் ""ராஜராஜன்1000'' ரக நெல் 750 ஹெக்டேர் நிலத்தில் சாகுபடி செய்ய இலக்கு நிரணயிக்கப்பட்டுள்ளது.இது குறித்து சாணார்பட்டி விவசாய விரிவாக்க மைய உதவி இயக்குனர் செல்வராஜ் கூறியதாவது:சாணார்பட்டி விவசாய வட்டாரத்தில் தற்போது வடகிழக்கு பருவ மழை பெய்து வருகிறது. குளங்கள்,கண்மாய்கள்,விவசாயக்கிணறுகளில் ஓரளவு நீர்மட்டம் காணப்படுகிறது.இதனை பயன்படுத்தி சில விவசாயிகள் தற்சமயம் விதை நெல் நாற்றங்கால் தயார்படுத்தி வருகின்றனர்.

மேலும் வடகிழக்கு பருவ மழை பெய்ய வாய்ப்புள்ளதால் சாணார்பட்டி மற்றும் அதிகாரிப்பட்டி விவசாய விரிவாக்க மையங்களில் முதற் போக சாகுபடிக்கேற்ற ஏ.டி.டி45., பொன்னி, ஐ.ஆர்20., ஏ.டி.டி39.,ஆகிய விதை நெல் ரகங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இவ் விதைநெல் மானிய விலையுடன் நுண்ணூட்டச்சத்து மருந்துகளுடன் வழங்கப்படுகிறது.வரும் 2010-2011ஆம் ஆண்டிற்கு தமிழக முதல்வர் அறிவித்த "" ராஜராஜன் 1000'' நெல் நடவு 750 ஹெக்டேர் நிலத்தில் விவசாயம் செய்ய இலக்கு நிரணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி இத்திட்டத்தில் விவசாயிகள்

சேர்ந்து அதிகப்படியான நெல் சாகுபடி செய்து அதிக லாபம் பெற அழைக்கப்படுகிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

**காரட் விளைச்சல் அதிகரிப்புவிலை சரிவால் கவலை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 14,2010,22:58 IST

கொடைக்கானல்:கொடைக்கானலில் தொடர் மழையால் காரட் விளைச்சல் அதிகரித்துள்ளது. மார்க்கெட்டில் விலை சரிந்துள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.கொடைக்கானல் மேல்மலை கிராமங்களில் 68 எக்டேரில் 90 முதல் 110 நாளில் வளரும் குறுகிய கால பயிரான காரட் பயிரிடப்பட்டுள்ளது. இங்கு விளையும் காரட், கேரளா, கர்நாடகாவிற்கு அதிகளவில் அனுப்பப்படுகிறது. தற்போது பெய்யும் கனமழையால் நல்ல விளைச்சல் உள்ளது. விலை இல்லாததால்,விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். விவசாயி தங்கவேலு கூறியதாவது: தற்போது பெய்யும் மழையால் நல்ல விளைச்சல் இருக்கிறது. கிலோ ரூ.20 விற்க வேண்டிய காரட், ரூ.12க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் ஒரு ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் வரை செலவளித்தாலும், ரூ.10 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்படுகிறது.என்றார்.

**கடலையில் சிவப்பு கம்பளிபுழு தாக்கம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 14,2010,22:58 IST

குஜிலியம்பாறை:மானாவாரி நிலக்கடலை பயிரில், சிவப்பு கம்பளி புழுக்களின் தாக்கம் அதிகரித்துள்ளதால், மகசூல் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.குஜிலியம்பாறை பகுதியில், பெரும்பாலான நிலங்கள் வானம் பார்த்த பூமியாக உள்ளன. கிணற்று பாசனம் குறைவாக உள்ள நிலையில், தற்போது பெய்து வரும் மழையை பயன்படுத்தி, மானாவாரி விவசாயமாக, நிலக்கடலை, எள், சோளம் கூடுதல் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளன. போதிய மழையால், பயிர்கள் செழித்துள்ள நிலையில், கூடுதல் மகசூலை விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். இந்நிலையில், ஆர். கோம்பை, ரெட்டியபட்டி, தாசமநாயக்கனூர், வடுகம்பாடி உள்ளிட்ட பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள மானாவாரி பயிர்களில், பரவலாக சிவப்பு கம்பளி புழுக்களின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் மகசூல் பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இது குறித்து வேளாண் உதவி இயக்குநர் ரவிபாரதியிடம் கேட்டபோது; விவசாய நிலங்களுக்கு சென்று ஆய்வு செய்ததில், பரவலாக சிவப்பு கம்பளி புழுக்கள் தென்படுகின்றன. இவற்றை

கட்டுப்படுத்த, ஒரு ஏக்கர் நிலத்திற்கு அரை கிலோ நாட்டு சர்க்கரையுடன், அரைகிலோ குளோரி பைரிபாஸ் மருந் தை கலந்து, சீராக தெளிக்க விவசாயிகளுக்குஅறிவுறுத்தி வருகிறோம் என்றார்.

**கூட்டுறவு வங்கி மூலம் அதிகளவு பயிர் கடன் : அமைச்சர் தகவல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 14,2010,22:50 IST

திண்டுக்கல்:கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு அதிகளவு பயிர் கடன் வழங்கப்படும் என அமைச்சர் ஐ.பெரியசாமி கூறினார். திண்டுக்கல்லில் 57வது கூட்டுறவு வார விழாவில் அவர் பேசியதாவது: தேசியமாக்கப்பட்ட வங்கிகளும், கூட்டுறவு வங்கிகளும் சுயஉதவிக்குழு பெண்களுக்கு கடன் கொடுக்க ஆர்வம் காட்டுகின்றன. சுயஉதவிக்கழுக்களுக்கும், பெண்களுக்குசிறுவணிககடன் அதிகளவு கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படுகிறது. ஏழை பெண்கள் காஸ் அடுப்பு பெற தி.மு.க., அரசால் வங்கி மூலம் கடன் கொடுக்கப்பட்டு, தற்போது அது தள்ளுபடியும் செய்யப்பட்டுள்ளது.

சுயஉதவிக்குழுக்களை சேர்ந்த பெண்கள் ரேஷன் கடை நடத்த முன்வந்தால் அவர்களுக்கு கடைகள் வழங்கப்படும். வருமானவரி கட்டுபவர்களுக்கு மட்டுமே சில வங்கிகள் கடன் கொடுக்கும், ஆனால் கூட்டுறவு வங்கிகள், யாருக்கு வேண்டுமானாலும் கடன் கொடுக்கும். வங்கிகள் நகைக்கடன்தான் தருவதாக குற்றச்சாட்டுள்ளது. இதை மாற்றி கூட்டுறவு வங்கிகள் அதிகளவு பயிர்கடன் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும். புதிதாக துவக்கப்பட்ட சுயஉதவிக்குழக்குகளுக்கு கடன் வழங்கப்படும். இவ்வாறு அவர் பேசினார். அரசு தலைமை கொற டா சக்கரபாணி, கலெக்டர் வள்ளலார், கூட்டுறவு இணைப்பதிவாளர் வில்வசேகரன், விவசாய விற்பனை குழு தலைவர் மணிமுருகன், தண்டபாணி எம். எல்.ஏ., மாவட்ட ஊராட்சி தலைவர் கவிதா, டி.ஆர்.ஓ., பேச்சியம்மாள் உட்பட பலர் பங்கேற்றனர்.

தினத் தந்தி

## காழிக்கோட்டில் அதிசய வாழை குலை




கோழிக்கோடு, நவ.16–

கேரள மாநிலம் கண்ணூர் மாவட்டம் சுவக்கராவை அடுத்து உள்ள ரெயில்வே குடியிருப்பு பகுதியைச்சேர்ந்தவர் இஸ்ராயேல். இவரது தோட்டத்தில் உள்ள ஒரு வாழை மரத்தில் அதிசய வாழை குலை தள்ளியுள்ளது. அதாவது சுமார் 5 அங்குல உயரத்தில் உள்ள இந்த வாழைத்தாரில் மொத்தம் 344 வாழைக்காய்கள் ஒன்றாக இணைந்து உள்ளன. வழக்கமாக வாழைக்காய்கள் சீப்புகளாக இருக்கும். ஆனால் இந்த வாழைத்தாரில் காய்கள் அனைத்தும் இடைவெளியின்றி நெருக்கமாக உள்ளன.

இந்த அதிசய வாழைக்காயை ஏராளமானவர்கள் பார்த்து செல்கிறார்கள். இது குறித்து இஸ்ராயேல் கூறுகையில் இந்த அதிசய வாழையை பொக்கிஷமாக கருதுகிறேன். இதை அப்படியே பக்குவப்படுத்தி அலங்காரப்பொருளாக வைக்க ஆசைப்படுவதாக கூறினார்.

**வங்கக் கடலில் தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி தமிழகத்தில் இன்று மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தகவல்**




தெற்கு வங்கக் கடலில் நகர்ந்து வரும் தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதியை படத்தில் காணலாம்.

*சென்னை, நவ.16–*

*தெற்கு வங்கக் கடலில் நகர்ந்து வரும் தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக, தமிழகத்தில் இன்று (செவ்வாய்கிழமை) பரவலாக மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*இது தொடர்பாக, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:–*

*காற்றழுத்த தாழ்வு பகுதி*

*தென்கிழக்கு வங்கக் கடல் மற்றும் தெற்கு அந்தமான் பகுதியில் நேற்று (14–ந் தேதி) நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு பகுதியின் காரணமாக, கடந்த 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் 9 சென்டி மீட்டர் மழையும், பவானியில் 6 செ.மீ. மழையும், திருத்தணியில் 3 செ.மீ. மழையும், ஏற்காட்டில் 2 செ.மீ. மழையும் பதிவாகியுள்ளது.*

*இன்று மழை பெய்யும்*

*தெற்கு அந்தமான் பகுதியில் நிலை கொண்டிருந்த இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலுவடைந்து, தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதியாக தென் கிழக்கு வங்கக் கடலில் வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து செல்கிறது.*

*இதன் காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் தமிழக கடலோர மாவட்டங்களிலும், உள் மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும் மழை பெய்யும். இதேபோல், வட கடலோர மாவட்டங்களிலும், புதுச்சேரியில் ஒருசில பகுதியிலும் கனமழை பெய்யவும் வாய்ப்பு உள்ளது.*

*தமிழகத்தில் இந்த மழை பொழிவு 48 மணி நேரம் நீடிக்கும். சென்னையை பொறுத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.*

*இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் கூறினார்.*